இன்சூரன்ஸ் கம்பெனியும் because it is a hazardous cargo இன்சூர் செய்வதற்கு ஒத்துக்கொள்ளுவது இல்லை. இதையெல்லாம் அறிந்து தமிழக அரசே மத்திய அரசை அணுகி (Shipping Corpor tion of India) விலிருந்து தனிப்பட்ட முறையில் கப்பலை ஒதுக்கச் சொல்லுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 69, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 70, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

70—

தருமபுரி மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியைப் பெருக்குதல்.

*19395— திரு. கா. பூ. முனுசாமி:
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கு மேலும் சலுகைகள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே'

தருமபுரி மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியைப் பெருக்க பல்வேறு சலுகைகளை விவசாயிகளுக்கு அரசு வழங்கி வருகிறது.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதலில் தருமபுரி மாவட்ட விவசாயிகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் பெயரை சுதந்திரப் போராட்டத் தலைவர் சுப்பிரமணிய சிவா என்று பெயரை மாற்றியதற்கு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு நேற்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தீபாவளி போனசாக கரும்பு விவசாய பெருமக்களுக்கு

1993 அக்டோபர் 29]

கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் அளவுக்கு டன் ஒன்றுக்கு 10 ரூபாய் முதல் 75 ரூபாய் வரை விலை உயர்வைக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு தருமபுரி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலை இருந்தபொழுது கரும்பு விளைகின்ற பகுதி அதிகமாக இருந்தது. அதே மாவட்டத்தில் மற்றொரு சர்க்கரை ஆலை உருவாகியதன் காரணமாக கரும்பு விளைச்சல் பகுதி குறைக்கப்பட்டதால், பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையினுடைய கரும்புத் தேவைகள் அதிகமாக இருப்பதால், மோகனூர், கள்ளக்குறிச்சி மற்றும் திருப்பத்தூர் போன்ற ஆலைகளிலிருந்து கரும்பை வரவழைத்து டன் ஒன்றுக்கு அதிகபட்சமாக 100 ரூபாய் கொடுக்க வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. எனவே இதை கருத்தில் கொண்டு சொந்தமாக நிலம் உள்ள கரும்பு விவசாயிகளுக்கு அதிகபட்சமாக ஒரு ஏக்கர் நிலத்திற்கு மானியமாக இலவசமாக விதைக் கரணை வழங்கிட அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை என இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இந்த இரண்டு சர்க்கரை ஆலைகளுக்கும் தேவையான அரவைத் திறனுக்கு ஏற்றவாறு அந்த மாவட்டத்திலே கரும்பு பயிரிடுவதற்கும் விவசாயிகள் அதிகப்படியாக தொழிலில் ஈடுபடுவதற்கும் அரசானது சலுகை விலையில் கரணைகளும் இதர பொருட்களும் வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ஒரே சர்க்கரை ஆலை இருந்தபொழுது அதற்கு இருந்த விவசாயத்தினுடைய நிலப்பரப்பு போதுமானதாக இருந்தது, பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற காரணத்தினால் விவசாய உற்பத்தியில் மற்ற மாவட்டங்களைப் போல ஒரு ஏக்கருக்கு 60 டன்னோ, 70 டன்னோ தருமபுரி மாவட்டத்தில் விளைவதில்லை, அதிக பட்சமாகவே ஒரு ஏக்கருக்கு 40-லிருந்து 45 டன் தான் விளைகின்ற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது, எனவே. சர்க்கரை ஆலையில். ஏற்கனவே வறட்சியான நேரங்களில் கரும்பு விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்குக் கடன் வழங்குகிறார்கள், அதை அதிகப்படுத்தி, அதோடு மட்டுமல்லாமல் வேளாண் பொறியியல் துறையிலுள்ள, கிணறை ஆழப்படுத்துவதற்குரிய இயந்திரங்கள் வழங்குவதற்கு, கரும்பு

[1993 அக்டோபர் 29

விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கி. சலுகை வாடகையில் அதைப் போன்ற இயந்திரங்களை அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கு, ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். இந்த ஆண்டு தருமபுரி மாவட்டத்திலுள்ள இரண்டு சர்க்கரை ஆலைகளுக்காக கரும்பை பயிரிடக் கூடிய விவசாயி களுடைய கிணறுகள் தூர்ந்து போய் இருக்கின்றன, எனவே அந்தக் கிணறுகளைத் தூர் எடுப்பதற்கு. 198 கிணறுகளுக்கு ரூபாய் 5.000 ஒவ்வொன்றுக்கும் மானியமாக ஒதுக்கீடு செய் திருக்கிறார்கள், அதுபோக இந்த ஆண்டிலே 26 இலட்சம் ரூபாய்க்கு கரும்புகளை ஆலைக்குக் கொண்டு வருவதற்கு வேண் டிய சாலைகள் அமைப்பதற்கு அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது, இரண்டு ஆண்டுக் காலத்திலே தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும் ரூபாய் 144.08 இலட்சம் செலவில் சாலைகள் கரும்பு அபிவிருத் திச் சாலைகள் போடப்பட்டு இருக்கின்றன, மேலும், விவசாயி களுக்கு அதிக புதிய ரக கரணைகளை வழங்குவதற்கு மானியமும் நோய் தடுப்பதற்கு மருந்துகள் மானிய சலுகைகளும். இன்னும் பல்வேறு சலுகைகளையும் அரசு வழங்கி இருக்கிறது, வழங்கிக் கொண்டும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்,

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மத்திய அரசாங்கம் மொலாசசை டீ-கன்ட்ரோல் செய்ததன் காரணமாக 200 ரூபாய்க்கு விற்ற இந்த மொலாசஸ் 2 ஆயிரம் ரூபாய்க்கு இன்று சென்றுவிட்ட காரணத்தால், கோடிக் கணக்கான ரூபாய்கள் கரும்பு ஆலை களுக்கு உபரியாக வருமானம் வர இருக்கிறது, ஆகவே. இப்படிப் பட்ட வருமானத்தை, இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு இன்னும் கூடுதல் சலுகையாக அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவா களுடைய கருத்தைக் கருத்தில் கொண்டுதான் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற ஆண்டு தமிழகத்திலேயுள்ள 14 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளுக்கு கரும்பை உற்பத்தி செய்து கொடுத்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கூடுதல் விலையாக

1993 அக்டோபர் 29]

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 6 கோடியே 48 இலட்சம் ரூபாயை கூடுதலாக வழங்கி இருக்கிறார்கள், இந்த ஆண்டும் கரும்புக்கு ஒரு டன்னுக்கு விலையை நிர்ணயிக்கின்ற பட்சத்தில் இதைக் கருத்தில் கொண்டு அதிகப்படியான விலை விவசாயி களுக்குக் கிடைக்கக் கூடிய அளவில் அரசு ஆவன செய்யும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர். ஈஸ்வரன்,

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கரும்பு உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகளுக்கு ஏற்கனவே 10 ரூபாயிலிருந்து 75 ரூபாய் என்று அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது, ஆனால் விவ சாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய கரும்பினுடைய விலை தற்போது போதுமானது அல்ல. ஏனென்றால் உற்பத்திச் செலவு கூடுதலாக இருக்கிறது. அதனுடைய போக்குவரத்து, உரம் இதையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது அங்கே வெல்லம் ஆட்டக்கூடிய நேரத்தில், ஒரு டன் கரும்பை ஆட்டி வெல்லம் எடுக்கும் பொழுது சுமார் 1 குவிண்டால் வெல்லத் திற்கு மேலே இருக்கிறது. அதனுடைய விலை, வெல்லம் எடுத்தால் 1000 ரூபாய்க்கு மேலே அதனுடைய வருமானம் வருகிறது. ஒரு டன் கரும்பு 420 ரூபாய் இன்றைக்கு மார்கெட். இப்பொழுது நீங்கள் 10 ரூபாயிலிருந்து 75 ரூபாய் கொடுத் திருப்பதனாலே மேக்சிமம் இந்த 75 ரூபாயைக் கணக்குப் போட் டால்தான் 500 ரூபாய்க்குக் கீழேதான் வருகிறது. அதே நேரத் திலே இந்த ஒரு டன் கரும்பை ஆட்டும்பொழுது ஆயிரம் ரூபாய்க்கு மேலே அதனுடைய வருமானம், வெல்லம் விவசாயி கள் உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அதே நேரத்திலே தமிழ்நாட்டிலே மட்டும் பர்சேஸ் டாக்ஸ் மட்டும் மற்ற மாநிலங்களை விட.....

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஈஸ்வரன் சுருக்கமாகக் கேளுங்கள். தருமபுரி மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கு மேலும் சலுகைகள் கேட்டு அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த டிஸ்டிரிக்டிலே, இதிலே நீங்கள் இவ்வளவு விரிவாகப் பேசிக் கொண்டிருக்க வேண்டாம் என்று நினைக்கிறேன்

திரு. ஆர். ஈஸ்வரன்: அதே நேரத்திலே, பர்சேஸ் டாக்ஸ் ஒரு டன்னுக்குத் தமிழக அரசு மட்டும் 72 ரூபாய் நீங்கள் பிடிக்கிறீர்கள். மற்ற ஸ்டேட்ஸ்லே அது 10 ரூபாய், 20 ரூபாய்க்கு மேலே இல்லை. ஆகையால் இந்த பர்சேஸ் டாக்ஸைக் குறைத்து, விவசாயிகளுக்கு ஊக்கம் வழங்குவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

[1993 அக்டோபர் 29

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய கரும்புக்கு விலையை நிர்ணயம் செய்வதே மத்திய அரசு தான். ஒவ்வோராண்டும் மத்திய அரசு கரும்பினுடைய விலையை நிர்ணயம் செய்கிறது. அந்த விலை விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை என்பதைக் கருத்திற் கொண்டுதான் தமிழக அரசு ஒவ்வோராண்டும் தன்னுடைய பரிந்துரை விலையாகக் கூடுதலாக விலையை நிர்ணயம் செய்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் கேள்வியைக் கேட்கின்றபொழுது, சென்ற ஆண்டு மொலாசஸ் என்பது அரசினுடைய கட்டுப்பாட்டுக்குள் இருந்தது, இந்த ஆண்டு மத்திய அரசு தன்னுடைய கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்ததன் காரணமாக மொலாசசினுடைய விலை ஏறத்தாழ 2,000 ரூபாய் வரை அதிகப்படியாக விற்றுக்கொண்டிருக்கிறது. இதனை அரசு கருத்திற் கொள்ளுமா என கேள்வி எழுப்பினார்கள். இதைத் தான் மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரனுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இந்த நிலையை மத்திய அரசு தெரிந்தும்கூட சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு வெறும் 35 ரூபாயை மட்டுமே கூட்டிக் கொடுத்திருக்கிறது மத்திய அரசு. எனவே, விவசாயிகளுடைய நலனைக் கருத்திற்கொண்டு அதிக விலையைத் தருகின்ற ஒரே அரசு இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அரசு தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 71 திருமதி தே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

71—

ஈசநத்தத்தில் கால்நடை மருத்துவமனை

*20032—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம் ஈசநத்தத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே,